# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.tn.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 11 / 2025**

திரு ப. சக்திவேல், த/பெ. பரமசிவம்,
மாரியம்மன் கோவில் தெரு,
திலகர் நகர், விளந்தை, ஆண்டிமடம் வட்டம்,
அரியலூர் மாவட்டம் – 621801.

………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு R. செல்வகோடி, வழக்கறிஞர்)

எதிர்

1. செயற்பொறியாளர்/இ.கா./அரியலூர்,
பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
எண் 56, ராஜாஜி நகர், கல்லூரி ரோடு, அரியலூர் – 621 713.

2. உதவி செயற்பொறியாளர்/ இ.கா./ஆண்டிமடம்,
பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
33KV துணை மின் வளாகம்,
ஆண்டிமடம் அஞ்சல், அரியலூர் – 621 801.

3. இளமின் பொறியாளர்/ இ.கா./வடக்கு/ஆண்டிமடம்,
பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
33KV துணை மின் வளாகம்,
ஆண்டிமடம் அஞ்சல், அரியலூர் – 621 801.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு P. ஐய்யனார், செயற்பொறியாளர்/இ.கா./அரியலூர்
திரு B. சக்திவேல், உதவி செயற்பொறியாளர்/ இ.கா./ஆண்டிமடம்
திரு V.G. பிரதாப், இளமின் பொறியாளர்/ இ.கா./வடக்கு/ஆண்டிமடம்)

**மனு பெறப்பட்ட நாள்: 07-02-2025**

**கேட்புரை நாள்: 20-03-2025**

**ஆணை நாள்: 27-03-2025**

07.02.2025 அன்று பெறப்பட்ட திரு ப. சக்திவேல், த/பெ. பரமசிவம், மாரியம்மன் கோவில் தெரு, திலகர் நகர், விளந்தை, ஆண்டிமடம் வட்டம், அரியலூர் மாவட்டம் அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 11/2025 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 20.03.2025 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

மேல்முறையீட்டாளர் தனது வேளாண் மின் இணைப்பிற்காக செலுத்தப்பட்ட தொகை ரூ.3,00,000/-ஐ திரும்ப வழங்குமாறு விண்ணப்பித்துள்ளார்.

### 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 மேல்முறையீட்டாளர் தனது வேளாண் மின் இணைப்பிற்காக KAVIADP திட்டத்தின் கீழ் செலுத்தப்பட்ட தொகை ரூ.3,00,000/-ஐ திரும்ப வழங்குமாறு விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேற்கூறிய விண்ணப்பத்தின் அடிப்படையில் மேல்முறையீட்டாளரிடம் தட்கல் திட்டத்தின் கீழ் பணம் பெறப்பட்டு அதற்கேற்ப மின் இணைப்பு வழங்கப்பட்டதால், அவரை KAVIADP திட்டத்தின் கீழ் கணக்கில் சேர்த்துக்கொள்ள முடியாது என்பதால், அவருக்குத் திருப்பித் தருவதற்கு சாத்தியமில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எதிர்மனுதாரரின் பதிலில் திருப்தி இல்லாததால் மேல்முறையீட்டாளர் பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 31.08.2024 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம் 08.10.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில்

அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>

3.1 பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 08.10.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"மன்றத்தின் தீர்வு:*
> *மனுதாரர் திரு.ப.சக்திவேல் த/பெ.பரமசிவம், மாரியம்மன் கோவில் தெரு, திலகர் நகர், விளந்தை* ***அவர்கள் KAVIADP*** *திட்டத்தில் வேளாண் மின் இணைப்பு பெறுவதற்கு தான் செலுத்திய ரூ.3,00,000/-ஐ திரும்ப வழங்க வேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளார்.*
>
> *வடக்கு/ஆண்டிமடம் அலுவலகத்திற்குட்பட்ட விளந்தை (தெற்கு) கிராமத்தில் அமைந்துள்ள சர்வே எண்:490/1J-ல் ஆழ்குழாய் கிணறு அமைத்து விவசாய மின் இணைப்பு வேண்டி 10 HP மின் பளுவிற்கு விண்ணப்பம் பெறப்பட்டதையடுத்து கோட்ட முன்னுரிமை எண்: 994 தேதி.10.03.2023 அன்று மேற்படி விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டு அதற்கான அறிவிப்பு கடிதம் (****KAVIADP திட்டத்தின் கீழ்) கடந்த 23.03.2023-ல் வழங்கப்பட்டுள்ளதும், திரு.ப.சக்திவேல் அவர்கள் விரைந்து மின் இணைப்பு பெற வேண்டும் என்பதால் தனது சொந்த பணத்தை வரைவோலையாக ரூ.3,00,000/-ஐ பிரிவு அலுவலகத்தில் 19.04.2023-****ல் செலுத்தியுள்ளதும், அதன்பிறகு அவருக்கான மதிப்பீட்டு அனுமதியின் படி விஸ்தரிப்பு பணிகள் முடிக்கப்பட்டு மின் இணைப்பு எண்: 330-014-1225 நாள்:23.06.2023-ல் வழங்கப்பட்டுவிட்டதும் வாரிய சாட்சிகளின் வாதங்கள் மற்றும் சமர்பித்த ஆவணங்களின் அடிப்படையில் தெரிய வருகிறது.*
>
> *மேலும் மனுதாரர் அவர்கள் மின் இணைப்பு பெறுவதற்கு 19.04.2023 அன்று மின்வாரிய அலுவலகத்தில் செலுத்திய தொகை ரூ.3,00,000/- ற்கான விபரத்தினை வேளாண்மை பொறியியல் துறைக்கு தெரிவிக்காத காரணத்தால் பொறியியல் துறையிலிருந்தும் திரு.ப.சக்திவேல்* ***அவர்களுக்கு KAVIADP திட்டத்தின் கீழ் மின் இணைப்பு வழங்குவதற்காக ரூ.3,00,000/- ற்கான DD-ஐ 18.04.2023-ல் மின்வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளதும் தெரிய வருகிறது.***
>
> *மனுதாரர் திரு.சக்திவேல் த/பெ.பரமசிவம், விளந்தை ஆண்டிமடம் அவர்கள் மின் வாரியத்திற்கு செலுத்திய ரூ.3,00,000/-ற்குண்டான மின் பளுவிற்கான மின் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டதால் அந்த தொகையை வாரியத்தின் தற்போதைய நடைமுறையிலுள்ள விதிகளின் படி திருப்பி அளிக்க இயலாது என்று மனுதாரருக்கு தெரிவித்து இம்மன்றம் தீர்ப்பளித்து உத்தரவிடுகிறது."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 20.03.2025 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு R. செல்வகோடி, வழக்கறிஞர் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு P. ஐய்யனார், செயற்பொறியாளர்/இ.கா./அரியலூர், திரு B. சக்திவேல், உதவி செயற்பொறியாளர்/ இ.கா./ஆண்டிமடம் மற்றும் திரு V.G. பிரதாப், இளமின் பொறியாளர்/ இ.கா./வடக்கு/ஆண்டிமடம், பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகளில் இம்முறையீட்டு மனுவிற்கு சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## 5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் திரு.ப.சக்திவேல் த/பெ.பரமசிவம், மாரியம்மன் கோவில் தெரு, திலகர் நகர், விளந்தை அவர்கள் விளந்தை (தெற்கு) வருவாய் கிராமத்தில் அமைந்துள்ள சர்வே எண்: 490/1J–ல் (10 HP) ஆழ்குழாய் கிணறு அமைத்து விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் பதிவு செய்து KAVIADP 2022–23 திட்டத்தின் கீழ் மின் இணைப்பு பெற கடந்த 19.04.2023 அன்று ரூ.3,00,000/– செலுத்தியுள்ளதாகவும், அதன்படி தனக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டதாகவும், மேலும் தான் கடன் பெற்று இருந்த வேளாண்மை பொறியியல் துறைக்கு தான் மின்வாரியத்தில் பணம்

செலுத்திய விபரத்தினை தெரியப்படுத்தாத காரணத்தால் திரு.ப.சக்திவேல் அவர்களின் விண்ணப்பத்திற்கு KAVIADP திட்டத்தின் கீழ் வேளாண்மை துறை மூலமாகவும், ரூ.3,00,000/-ஐ 18.04.2023-ல் மின்வாரியத்திற்கு செலுத்தப்பட்டுவிட்டதெனவும், அதனால் தான் செலுத்திய ரூ.3,00,000/-ஐ திரும்ப வழங்கக் கோரியதாகவும் தெரிவித்துள்ளார்.

5.2 மேல்முறையீட்டாளர் ஒரே மின் இணைப்பிற்குண்டான (KAVIADP) SCHEME உரிய தொகை உரிய துறையின் வாயிலாக செலுத்தப்பட்டதை மேல்முறையீட்டாளருக்கு எதிர்மனுதாரர்கள் தெரிவிக்காமல், தொடர்ந்து அதே மின் இணைப்பிற்கு செலுத்திய கட்டணத்தினை நுகர்வோர் மன்றம் திருப்பி தர உத்தரவிடாமல், மின்வாரிய விதிகளில் செலுத்திய கூடுதல் கட்டணத்தினை திருப்பி தர இடமில்லையென்ற எதிர்மனுதாரர்களின் பதிலுரையை உத்தரவாக ஏற்க இயலாது எனவும், ஒரு திட்டத்திற்கு அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணத்திற்குமேல் கூடுதல் கட்டணம் வசூல் செய்யவோ, செலுத்தக்கோரவோ இடமில்லை என்பதனை கருத்தில் கொள்ளாமல் வழங்கப்பட்ட ஒரு சார்பு, தவறான, நியாயமற்ற தீர்ப்பிற்கு எதிராக இந்த மேல்முறையீடு எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 மேல்முறையீட்டாளர் ஒரே மின் இணைப்பிற்கு வேளாண்மை பொறியியல் துறையால் (KAVIADP) SCHEME செலுத்தப்பட்ட தொகையினை மட்டும் ஏற்றுக்கொண்டு மேல்முறையீட்டாளரால் செலுத்தப்பட்ட தொகையினை கூடுதல் தொகையாகவும், அவற்றினை அவரது வங்கிக்கணக்கிற்கோ அல்லது ரொக்கமாகவோ காசோலையாகவோ திருப்பி வழங்கிட எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 அரியலூர் கோட்டம், ஆண்டிமடம் உபகோட்டம், உதவி மின்பொறியாளர் / இயக்குதலும் & பராமரித்தலும்/வடக்கு ஆண்டிமடம் பிரிவுக்கு உட்பட்ட விளந்தை (தெற்கு) வருவாய் கிராமத்தில் அமைந்துள்ள சர்வே எண்:490/1J ல் ஆழ்குழாய் கிணறு அமைத்து விவசாய மின் இணைப்பு வேண்டி தட்கல் திட்டத்தின் கீழ்

10 கு.தி மின் பளுவிற்கு விண்ணப்பம் பெறப்பட்டதையடுத்து கோட்ட முன்னுரிமை எண்:994 தேதி 10.03.2023 அன்று பதிவு செய்யப்பட்டு, பிரிவு முன்னுரிமை எண்:001 நாள் 19.04.2023 ன் படி மதிப்பீடு பெறப்பட்டதன் அடிப்படையில் 14.686/A26/006/23/24/ 08.05.2023–ன் படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்கண்ட அனுமதியின் படி பணிகள் முடிக்கப்பட்டு மின்னிணைப்பு எண் 330–014–1225/ 23.06.2023 படி மின் இணைப்பும் வழங்கப்பட்டுவிட்டது எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மேலும் மனுதாரர் அவர்கள் மின்னிணைப்பு பெறுவதற்கு அலுவலகத்தில் செலுத்திய தொகை ரூ.3,00,000/– த்திற்கான விபரத்தினை வேளாண்மை பொறியியல் துறைக்கு தெரிவிக்காத காரணத்தால் வேளாண்மை பொறியியல் துறையிலிருந்தும் திரு.ப.சக்திவேல், த/பெ.பரமசிவம் அவர்களுக்கு KAVI ADP திட்டத்தின் கீழ் மின்னிணைப்பு வழங்குவதற்காக ரூபாய்.300000/– (100 பயனாளர்களுக்கு ரூ.2,55,00,000/–) DD No:737285 in Favor of CFC TANGEDCO பெயரிலும் செலுத்தப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மேற்படி திரு.ப.சக்திவேல் அவர்களுக்கு வேளாண் துறையிலிருந்து KAVI ADP திட்டத்தின் கீழ் மின் வாரியத்திற்கு பணம் செலுத்தப்பட்ட விபரம் 19.04.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தான் தெரிய வந்ததாகவும், இந்நிலையில் மனுதாரர் தட்கல் திட்டத்தில் தான் செலுத்திய கட்டணத்தை திரும்ப வழங்க வேண்டி பிரிவு அலுவலகத்தில் கடிதம் அளித்ததன் அடிப்படையில் மேற்படி நபருக்கு தட்கல் திட்டத்தில் வசூலிக்கப்பட்ட தொகை ரூ.3,00,000/–யை திரும்ப வழங்குவதற்கு அனுமதி கோரி தலைமை அலுவலகம் சென்னைக்கு கருத்துரு அனுப்பப்பட்டிருந்ததாகவும், ஆனால் தட்கல் திட்டத்தின் கீழ் தொகை பெறப்பட்டு அதற்கான மின்னிணைப்பும் திரு.ப.சக்திவேல் அவர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டதால் KAVIADP திட்டத்தின் கீழ் மின்னிணைப்பு பெற மேற்படி நபரை அனுமதிக்க இயலாது என்பதால் திரு.ப.சக்திவேல் அவர்கள் கோரும் தொகையை வாரிய விதிமுறைகளின் படி திருப்பி அளிக்க சாத்தியக்கூறு இல்லை என தலைமை அலுவலகம் சென்னையிலிருந்து கடித.எண்.Lr.No:CE/plg&RC/SE/RE&ID/EE/RE/A1/F.Agri/ D.499/24, Dt.08.08.2024 மூலம் தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 இதற்கிடையில் மனுதாரர் திரு.ப.சக்திவேல் அவர்கள் பெரம்பலூர் நுகர்வோர் குறைதீர் மன்றத்தை அணுகி மேற்கண்ட தொகையை திருப்பி அளிக்க கேட்டுக்கொண்டதாகவும், அவருக்கு தலைமை அலுவலகம் சென்னையில் இருந்து பெறப்பட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருந்தவாறு திரு.ப.சக்திவேல் அவர்கள் கோரும் தொகையை வாரிய விதிமுறைகளின் படி திருப்பி அளிக்க இயலாது என தெரிவித்து 17.10.2024 அன்று ஆணை வழங்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

பி.ப.பா

**TNPDCL**

From
Er.K.Indirani, B.E.,M.C.A.,F.I.E.,
Chief Engineer/Planning & RC,
Tamil Nadu Power Distribution and,
Corporation Limited,
144, Anna Salai, Chennai – 600002

To
The Chief Engineer,
Distribution,
Trichy Region

Lr.No.CE/Plg&RC/SE/RE&I(D)/EE/RE/A1/F.Agri/D. 499 /24, dt. 08.8.2024

Sub: TNPDCL – Perambalur EDC – Refund of amount collected towards effecting agricultural service connection to Thiru.Sakthivel – reg

Ref: 1) க.எண்: த.பொ/ப/தி/செ.பொ/பகிர்மானம்/உ.செ.பொ/பொது& செ.உ/அ.எண்.929/2024, நாள் 19.7.2024
2) Lr.No.CE/PLG&RC/SE/RE&I(D)/EE/RE/A1/F.KAVIADP/D.No.229/23, dt.02.5.2023

*****

In the reference letter cited above, CE/D/Trichy has requested approval to refund an amount of Rs.3.0 Lakhs to Thiru.Sakthivel, S/o.Paramasivam, Andimadam stating that the individual already paid Rs.3.0 Lakhs under KAVIADP Scheme and subsequently agriculture Engineering also paid Rs.3.0 Lakhs for the same applicant.

In this regard following are stated;

Agricultural service connection under KAVIADP Scheme 2 to the SC/ST Farmers are being effected based on the recommendation and payment received from CE/Agriculture Engineering to TANGEDCO/HQ. Based on that only, necessary instructions will be issued to the field to effect service connection under KAVIADP Scheme 2. The above application as recommended by Agriculture department, has been sent from Headquarters under KAVIADP Scheme 2 on 2.5.2023.

In this case, while verifying the application in the LT billing portal, it is seen that Normal category application of Thiru.Sakthivel has been moved from Normal to Fast Track Tatkal Scheme 2022-2023 on 10.3.2023 in the EE/Portal (trn4402ee1) and necessary Tatkal Scheme Cost of Rs.3.0 L under Fast Track Tatkal SFS Scheme collected on 19.4.2023 and necessary sanction also issued under Tatkal Scheme on 08.5.2023. Hence, before recommending the applicant case in under KAVIADP Scheme 2 from TANGEDCO Headquarters, the application processed under TATKAL SFS scheme.

Further, as per the instruction dated 27.11.2021 the refund of Tatkal SFS Scheme cost is not possible. Hence, the request of CE/D/Trichy to refund the amount collected under Tatkal Scheme cost is not feasible of compliance and the applicant service shall be moved from KAVIADP Component 2 to TATKAL SFS scheme.

Superintending Engineer/RE&I(D),
For Chief Engineer/Planning &RC

Copy to the Superintending Engineer/Perambalur EDC

6.5 மேலும் தலைமை அலுவலகம் சென்னையில் இருந்து வேளாண் பொறியியல் துறைக்கு 9/11/24 நாளிட்ட கடிதத்தில் தட்கல் திட்டத்தின் கீழ் தொகை பெறப்பட்டு அதற்கான மின்னிணைப்பும் திரு.ப.சக்திவேல் அவர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டதால் KAVIADP திட்டத்தின் கீழ் மின்னிணைப்பு பெற மேற்படி நபரை அனுமதிக்க இயலாது என்பதால் திரு.ப.சக்திவேல் அவர்கள் கோரும் தொகையை வாரிய விதிமுறைகளின் படி திருப்பி அளிக்க சாத்தியக்கூறு இல்லை எனவே திருப.சக்திவேல் அவர்களுக்கு பதிலாக வேறு ஒரு பயனாளியை தெரிவித்து ரூ.3,00,000/- ற்கான தொகைக்கு KAVIADP திட்டத்தின் கீழ் புதிய மின்னிணைப்பு பெற்றுக் கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

பி.ப.பா

TNPDCL

From
Er.R.R.Santhi, M.Tech., M.I.E.,
Chief Engineer/Planning & RC
Tamil Nadu Power Distribution Corporation Limited,
144, Anna Salai, Chennai - 600 002.

To
The Chief Engineer (Agri.Engg.)
Agricultural Engineering Department,
487, Annasalai, Nandhanam,
Chennai - 600035.

Lr.No.CE/Plg&RC/SE/RE&I(D)/EE/RE/A1/F.KAVIADP/D.701/24, dt. 9 .11.2024

Sir,

Sub: TNPDCL – Ariyalur District - Effecting Agricultural Service Connection to Thiru.Sakthivel, S/o.Paramasivam, under KAVIADP Component

Ref: 1) Letter No.CADP4/19407/2021, Dated 19.4.2023

2) CE/Plg&RC/SE/RE&I(D)/EE/RE/A1/F.Agri/D.499/24, dt.08.8.2024

******

The proposal for effecting 1 No. agricultural service connection to Thiru.P.Sakthivel, S/o.Paramasivam, Ariyalur district has been received from CE/Agri.Engg. department vide letter (1) cited above along with Tatkal SFS scheme cost of Rs.3.0 Lakhs.

Prior to recommendation of CE/Agri.Engg., the applicant has already opt under Tatkal SFS Scheme and the applicant's application has been moved from Normal category to Tatkal SFS Scheme by EE/O&M/Ariyalur on 10.3.2023 and Rs.3.0 Lakhs also paid by the applicant Thiru.P.Sakthivel on 19.4.2023 and sanction also processed under Tatkal SFS Scheme.

Hence, before recommending the applicant case under KAVIADP Scheme component 2 by CE/Agri.Engg., the application processed under Tatkal SFS Scheme.

Subsequently, CE/D/Trichy Region in the letter dt.19.7.2024 has requested to refund the amount paid by the applicant under Tatkal SFS Scheme stating that CE/Agri.Engg. has paid Rs.3.0 Lakhs under KAVIADP Scheme Component 2 to the applicant.

In this regard, necessary clarification has issued to the CE/D/Trichy Region stating that request of refund of amount collected under Tatkal SFS Scheme cost to

the applicant is not feasible of compliance since, before recommending the applicant case under KAVIADP Scheme Component 2, the applicant's case processed under Tatkal SFS Scheme and as per TANGEDCO's rule refund of Tatkal SFS cost is not possible.

The copy of the letter communicated to CE/D/Trichy Region is also enclosed herewith.

Hence, in place of Thiru.P.Sakthvel, S/o.Paramasivam recommended by CE/Agri.Engg., under KAVIADP Scheme Component 2, it is requested to recommend another applicant for a load of 10H.P.

Encl: Ref (2)

Superintending Engineer/RE&I(D),
For Chief Engineer/Planning&RC

Copy to the CE/D/Trichy Region

6.6 பிரிவு அலுவலகத்தில் விண்ணப்பதாரரிடம் இருந்து தட்கல் திட்டத்திற்கு மட்டுமே காசோலை பெறப்படும் எனவும் வேளாண்மை துறையிடமிருந்து பெறப்படும் தொகை

மட்டுமே KAVIADP திட்டத்திற்கு பொருந்தும் எனவும், இந்நிலையில் மனுதாரர் இதே பொருள் குறித்து மீண்டும் மேல்முறையீடு செய்துள்ளதாகவும், தட்கல் திட்டத்தின் கீழ் தொகை பெறப்பட்டு அதற்கான மின்னிணைப்பும் திரு.ப.சக்திவேல் அவர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டதால் வாரிய விதிமுறைகளின் படி மேல் முறையீட்டு மனுதாரர் கோரும் தொகை ரூ.3,00,000/–யை திருப்பி அளிக்க இயலாது எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் திரு.ப.சக்திவேல், விளந்தை (தெற்கு) வருவாய் கிராமத்தில் உள்ள தனது விவசாய ஆழ்குழாய் கிணற்றிற்கு மின் இணைப்பு பெறுவதற்காக KAVIADP 2022–23 திட்டத்தின் கீழ் 19.04.2023 அன்று ரூ.3,00,000/– செலுத்தியுள்ளதாகவும், பின்னர், தான் கடன் பெற்று இருந்த வேளாண்மை பொறியியல் துறையும் 18.04.2023 அன்று அதே தொகையை மின்வாரியத்திற்கு செலுத்தியிருப்பதாகவும், எனவே, தனிநபராகத் தான் செலுத்திய ரூ.3,00,000/– திருப்பி வழங்கப்பட வேண்டும் என விண்ணப்பித்துள்ளார்.

7.3 மேல்முறையீட்டாளர், ஒரே மின் இணைப்பிற்காக அரசு திட்டத்தின் கீழ் உரிய துறை செலுத்திய தொகையை மீண்டும் தனியாரிடமிருந்து வசூலிப்பது முறையல்ல என்றும், ஒரே மின் இணைப்பிற்காக வேளாண்மை பொறியியல் துறை மூலம் செலுத்தப்பட்ட தொகையை மட்டுமே ஏற்றுக்கொண்டு அவர் தனிப்பட்ட முறையில் செலுத்திய தொகையை கூடுதல் கட்டணமாகக் கருதி தனது சொந்த செலவில் செலுத்திய தொகையை திரும்ப வழங்குமாறு தெரிவித்துள்ளார்.

7.4 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் திரு.ப.சக்திவேல் அவர்கள் தட்கல் திட்டத்தின் கீழ் 10 கு.தி. மின் இணைப்பிற்கு விண்ணப்பித்ததையடுத்து, அவருக்கு கோட்ட முன்னுரிமை எண் 994, பிரிவு முன்னுரிமை எண் 001 ஆகியவற்றின் படி மதிப்பீடு செய்யப்பட்டு, 08.05.2023 அன்று அனுமதி வழங்கப்பட்டு, தேவையான பணிகள்

முடிக்கப்பட்ட பின்னர் 23.06.2023 அன்று மின் இணைப்பு வழங்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

7.5 மேலும், திரு.ப.சக்திவேல் அவர்கள் அலுவலகத்தில் தனது மின் இணைப்பிற்காக ரூ.3,00,000/- செலுத்திய விவரத்தினை வேளாண்மை பொறியியல் துறைக்கு தெரிவிக்காத காரணத்தால், வேளாண்மை பொறியியல் துறையிடமிருந்து KAVIADP திட்டத்தின் கீழ் கூடுதலாக ரூ.3,00,000/- செலுத்தப்பட்டதாகவும், இதற்கான தகவல் 19.04.2023 தேதியிட்ட கடிதத்தின் மூலம் தான் வெளிவந்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 இதன் அடிப்படையில், திரு.ப.சக்திவேல் அவர்கள் தட்கல் திட்டத்தின் கீழ் பணம் செலுத்தியதை திரும்ப வழங்குமாறு கோரிய நிலையில், பிரிவு அலுவலகம் தலைமை அலுவலகத்திடம் அனுமதி கோரியதாகவும், ஆனால் தட்கல் திட்டத்தின் கீழ் பணம் பெறப்பட்டு அதற்கேற்ப மின் இணைப்பு வழங்கப்பட்டதால், அவரை KAVIADP திட்டத்தின் கீழ் கணக்கில் சேர்த்துக்கொள்ள முடியாது என்பதால், அவருக்குத் திருப்பித் தருவதற்கு சாத்தியமில்லை என தலைமை அலுவலகம் எழுத்துப்பூர்வமாக தெரிவித்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 மேலும், 09.11.2024 அன்று, தலைமை அலுவலகம், வேளாண்மை பொறியியல் துறைக்கு அனுப்பிய கடிதத்தின் மூலம், திரு.ப.சக்திவேல் அவர்கள் KAVIADP திட்டத்தின் கீழ் மின் இணைப்பு பெற முடியாது என்பதால், அந்த திட்டத்தில் செலுத்தப்பட்ட தொகையை அவருக்குப் பதிலாக வேறு ஒரு பயனாளிக்கு ஒதுக்கி புதிய மின் இணைப்பு வழங்க அனுமதி பெறுமாறு கேட்டுக்கொண்டதாகவும், இதனைக் கொண்டு அவர்கள் கோரும் தொகையை திருப்பி வழங்க முடியாது எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.8 மேல்முறையீட்டாளர் 10.03.2023 இணையதளம் மூலம் KAVIADP திட்டத்தின் கீழ் விவசாய மின் இணைப்பு விண்ணப்பம் பதிவு செய்துள்ளது தெரியவருகிறது. மேலும் எதிர்மனுதாரர் application tracking No.994 நாள் 10.03.2023-இன் அடிப்படையில் ரூ.3,00,000/-ஐ செலுத்த கீழ்கண்ட கடிதத்தில் அறிவுறுத்தியது தெரியவருகிறது. மேலும் அக்கடிதத்தில் உதவி மின்பொறியாளருக்கும் அப்பணத்தை பெற்றுக் கொள்ள அறிவுறுத்தியதும் தெரியவருகிறது.

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| பொறிஞர்.பெ.அய்யனார், பி.இ. | திரு.ப.சக்திவேல், |
| செயற்பொறியாளர், | த/பெ.பரமசிவம்,திலகர் நகர், |
| இயக்கலும் காத்தலும், | மாரியம்மன் கோவில் தெரு, விளந்தை, |
| அரியலூர் - 621 713. | ஆண்டிமடம் (வட்டம்) |
| | அரியலூர் (மாவட்டம்) - 621801 |

க.எண்:செ.பொ/இ&கா/அரி/தொநுஉ.II/கோ. KAVIADP /எண்: 16 /23, நாள் : 23.03.2023

அய்யா,

பொருள்: மின்சாரம் - அரியலூர் கோட்டம் -(KAVIADP) FTSFS 22-23 தட்கல் முறையில் விவசாய மின் இணைப்பு வழங்க தங்களது விண்ணப்ப பதிவு எண். 994 நாள் 10.03.2023 மின்பளு 10 HP வருவாய் கிராமம் விளந்தை (தெ) அறிவிப்பு கடிதம் அனுப்புதல் - தொடர்பாக.

******

அரியலூர் கோட்ட செயற்பொறியாளர் அலுவலகத்தில் தட்கல் திட்டத்தில் (KAVIADP) மின் இணைப்பு பெறுவதற்கு விருப்ப கடிதம் அளித்துள்ளீர்கள். இது தொடர்பாக ரூ.3,00,000 /-க்கு மின்பளு. 10 HP புலஎண்:490-1J (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) SE/PEDC/TANGEDCO/PERAMBALUR என்று பெயரில் கேட்பு வரவோலை மற்றும் நில உரிமை சான்றுகளுடன் உதவி இளமின் பொறியாளர் /இ.கா/ வடக்கு / ஆண்டிமடம் - அலுவலகத்தில் அளித்திடுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தாங்கள் வரவோலை செலுத்தும் முன்னுரிமை அடிப்படையில் தங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படும் என்ற விபரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும் 2022-2023-ம் ஆண்டின் இலக்கிற்கு ஏற்ப வரவோலை பெறப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

செயற்பொறியாளர்,
இ.கா/அரியலூர்.

நகல்: உதவி செயற்பொறியாளர்/இ.கா/ ஆண்டிமடம்
நகல்: உதவி இளமின் பொறியாளர்/இ.கா/ வடக்கு /ஆண்டிமடம்-

தட்கல் திட்டத்தில் (KAVIADP) மின் இணைப்பு பெறுவதற்கு நுகர்வோரிடம் உரிய வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் கள ஆய்வு மேற்கொண்டு விபரங்கள் சரியானவை என உறுதி செய்த பின் தடையில்லா சான்று ஏதேனும் தேவைப்படின் அதனையும் பெற்றுக்கொண்டு நுகர்வோரிடம் - 10 HP -குதிரைத்திறனுக்குரிய தொகையினை கேட்பு வரைவோலையாக பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

இதன் அடிப்படையில் மேல்முறையீட்டாளர் 19.04.2023 அன்று பணம் செலுத்தியது தெரியவருகிறது. இக்காலகட்டத்தில் உரிமம்தாரரின் தலைமை

அலுவலகத்தில் 63 பயனீட்டாளர்களுக்குண்டான தொகை வேளாண்மை துறை அலுவலகம் மூலம் பெற்றுக் கொண்டதும் தெரியவருகிறது.

7.9 இது சம்பந்தமாக மேல்முறையீட்டாளர் விவசாய மின் இணைப்பு வேண்டி KAVIADP திட்டத்தில் பதிவு செய்து ஒதுக்கீடு பெறப்பட்டதற்கான ஆவணங்களை ஆராய விரும்புகிறேன். அவை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

பி.ப.பா

**TANGEDCO**

O/o. Director (Distribution)

Chennai - 600 002.

Memo.No.CE/PLG&RC/SE/RE&I(D)/EE/RE/A1/F.KAVIADP/D.No.229/23; dt.08.05.2023.

Sir,

Sub: TANGEDCO—Effecting of Agricultural service connections to SC/ST farmers in individual names under KAVIADP Component (2) (2021-22)–Reg.

Ref: Memo No.CE/PLG&RC/SE/RE&I(D)/EE/RE/A1/F.KAVIADP/D.No.188/23; Dt.10.04.2023.

******

In the reference memo cited above, instructions have been issued to the field officers to effect agricultural service connections under KAVIADP Component (2) Scheme on priority to SC/ST farmers with free electricity charges for the 63 beneficiaries for which amount has already been collected on par with TATKAL SFS Scheme cost.

The Chief Engineer/Agriculture Engineering Department has furnished the 100 Nos SC/ST beneficiary list along with Demand draft no.737283 for a value of Rs. 2.55 Crores towards TATKAL SFS Scheme cost and requested to effect service connections to SC/ST beneficiaries under KAVIADP Component (2) Scheme (2021-22).

The 100 Nos list of SC/ST beneficiaries along with payment details are enclosed here with.

Agricultural Engineering Department

Kalaignarin All Village Integrated Agriculture Development Programme -2021-22

Details for payment to be made to TANGEDCO for the completed wells under Component .2 Creation of water sources to Individual SC/ST beneficiaries

| Sl. No | Name of the District | Name of the Applicant, and Address | Name of the Division office | Name of the Electricity Distribution Circle (EDC) | Agriculture Application Registration No and Date | Load Applied in HP | SF No | Revenue Village | Tatkal Self Financing Scheme Amount in Rupees |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Ariyalur | Seenivasan S/o Thillaiyan, | Executive Engineer, TANGEDCO, Ariyalur | Superintending Engineer,TANGEDCO. Perambalur | 200063260012323 dated 19.01.2023 | 10 HP | 240/3A | Sivuvaicheri | 300000 |
| 2 | Ariyalur | Sakthivel S/o Paramasivam, | Executive Engineer, TANGEDCO, Ariyalur | Superintending Engineer,TANGEDCO. Perambalur | 200063300323243 dated 10.03.2023 | 10 HP | 400/11 | Vilanthai | 300000 |
| 3 | Krishnagiri | Venkatesha S/o Thimmarayappa Santhanapalli. | Executive Engineer TANGEDCO, Hosur | Superintending Engineer, Krishnagiri | 200080720022361 dated 05.02.2023 | 5 HP | 51/1A | Santharapalli | 250000 |
| 4 | Krishnagiri | Mallesha S/o Mallappa Hanumanthapuram | Executive Engineer, TANGEDCO, Hosur | Superintending Engineer, Krishnagiri | 200080720223103 dated 22.02.2023 | 5 HP | 3/1B2 | Iruthukottai | 250000 |
| 5 | Krishnagiri | P. Sundarajan, S/o Perumal Hanumanthapuram | Executive Engineer, TANGEDCO, Hosur | Superintending Engineer, Krishnagiri | 200080720223111 dated 23.02.2023 | 5 HP | 351/3A | Hanumanthapuram | 250000 |
| 6 | Krishnagiri | Muninerjan, Sikka averipalli, Denkanikottai | Executive Engineer, TANGEDCO, Hosur | Superintending Engineer, Krishnagiri | 200080740223115 dated 24.02.2023 | 5 HP | 32/2 | Sikka averipalli | 250000 |
| 7 | Krishnagiri | Nagaraj, Dhamasnappalli, Anjetti | Executive Engineer, TANGEDCO, Hosur | Superintending Engineer, Krishnagiri | 200080810323153 dated 01.03.2023 | 5 HP | 737/1C2 | Dhamasnappalli | 250000 |
| 8 | Krishnagiri | S.Marichetty, S/o Samundi, Karadikal village, Madakal | Executive Engineer, TANGEDCO, Hosur | Superintending Engineer, Krishnagiri | 200080850323129 dated 13.3.2023 | 5 HP | 380/5 | Karadikal | 250000 |
| 9 | Krishnagiri | S.Marimuthu,S/o Samikannu, Karadikal village, Madakal | Executive Engineer, TANGEDCO, Hosur | Superintending Engineer, Krishnagiri | 200080850323133 dated 13.3.2023 | 5 HP | 399/1,2 | Karadikal | 250000 |
| 10 | Krishnagiri | Vangadamma, W/o Venkatamadhappa, Nellumaru,Agraharam | Executive Engineer, TANGEDCO, Hosur | Superintending Engineer, Krishnagiri | 200080740323182 dated 31.3.2023 | 5 HP | 130/6 | Nellumaru Agraharam | 250000 |

7.10 மேற்குறிப்பிட்ட ஆவணங்களின் மூலம் வரிசை எண் 2–இன் வாயிலாக மேல்முறையீட்டாளர் KAVIADP Component (2) திட்டத்தின் கீழ் பயனாளியாக சேர்க்கப்பட்டு அதற்குண்டான தொகை வேளாண் துறையிடமிருந்து பெறப்பட்டது உறுதி செய்யப்படுகிறது. இந்நிலையில் மேல்முறையீட்டாளர் திரு சக்திவேல் விவசாய மின் இணைப்பு பெற எதிர்மனுதாரர் அறிவுறுத்தலின் அடிப்படையிலும் KAVIADP திட்டத்தில் பணம் செலுத்தியதும், மேலும் உரிமம்தாரர் திரு சக்திவேலுக்கு KAVIADP திட்டத்தில் 63 பயனீட்டாளருக்கான மொத்த தொகையில் இரண்டாம் பயனீட்டாளராக இருக்கும் நிலையில் பணம் பெற்றதும் தெரியவருகிறது.

7.11 இதன் மூலம் உரிமம்தாரர் மேல்முறையீட்டாளரின் விவசாய ஆழ்குழாய் கிணற்றிற்கு மின் இணைப்பு பெறுவதற்காக KAVIADP 2022–23 திட்டத்தின் கீழ் மேல்முறையீட்டாளர் 19.04.2023 அன்று ரூ.3,00,000/– செலுத்தியுள்ளதும், ஆனால் அதற்கு முன்தினமே வேளாண்மை பொறியியல் துறையும் 18.04.2023 அன்று அதே தொகையை மின்வாரியத்திற்கு செலுத்தியிருப்பதும் கவனத்தில் கொள்ளப்படுகிறது. எனவே, மேல்முறையீட்டாளரின் விவசாய மின் இணைப்பு KAVIADP திட்டத்தில் மின் இணைப்பு வழங்குவதற்கு இரண்டு முறை பணம் பெற்றது உறுதியான நிலையில் அவரிடம் பெற்ற தொகையை உரிமம்தாரர் திரும்ப வழங்க வேண்டுமென தீர்வு செய்யப்படுகிறது.

8.0 <u>முடிவுரை</u>:

8.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வின்படி, மேல்முறையீட்டாளருக்கு விவசாய மின் இணைப்பு KAVIADP திட்டத்தில் வழங்குவதற்கு இரண்டு முறை பணம் பெற்றது உறுதியான நிலையில் அவரிடம் பெற்ற தொகையை திரும்ப வழங்குமாறு உத்தரவிடப்படுகிறது.

8.2 மேற்கண்ட ஆணையை 30 நாட்களுக்குள் நிறைவேற்றியமைக்கான அறிக்கையை இந்த ஆணை கிடைக்கப்பெற்ற 45 நாட்களுக்குள் எதிர்மனுதாரர் மின்குறைதீர்ப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

8.3 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 11/2025 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திரு ப. சக்திவேல், த/பெ. பரமசிவம், – By RPAD
மாரியம்மன் கோவில் தெரு, திலகர் நகர்,
விளந்தை, ஆண்டிமடம் வட்டம்,
அரியலூர் மாவட்டம் – 621801.

2. செயற்பொறியாளர்/இ.கா./அரியலூர்,
பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
எண் 56, ராஜாஜி நகர், கல்லூரி ரோடு, அரியலூர் – 621 713.

3. உதவி செயற்பொறியாளர்/ இ.கா./ஆண்டிமடம்,
பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
33KV துணை மின் வளாகம்,
ஆண்டிமடம் அஞ்சல், அரியலூர் – 621 801.

4. இளமின் பொறியாளர்/ இ.கா./வடக்கு/ஆண்டிமடம்,
பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
33KV துணை மின் வளாகம்,
ஆண்டிமடம் அஞ்சல், அரியலூர் – 621 801.

5. மேற்பார்வை பொறியாளர், – By Email
பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
எண் 230 KV ஆட்டோ துணை வளாகம் பெரம்பலூர்,
நான்கு ரோடு அருகில், பெரம்பலூர் – 621 220.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – **தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.